Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

செய்தியாளர்கள் தேவை



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 055 | திங்கள் Monday | 25.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்களை சந்திக்க முதலமைச்சர் விஜய் அடுத்த வாரம் டெல்லி பயணம்





கரூரில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ந் தேதி நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் இறந்தனர். இது தொடர்பான விசாரணைக்காக கடந்த ஜனவரி மாதம் 12 மற்றும் 19-ந் தேதிகளில் டெல்லி சி.பி.ஐ. முன்பு த.வெ.க. தலைவர் விஜய் ஆஜரானார்.

அன்றைக்கு ஒரு கட்சியின் தலைவராக டெல்லி சென்ற விஜய், தற்போது தமிழகத்தின் முதல்-அமைச்சராக மீண்டும் 'மாஸ் எண்ட்ரி' கொடுக்க இருக்கிறார்.

இந்த பயணத்தின்போது, பிரதமர் நரேந்திரமோடி, மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா, காங்கிரஸ் தலைவர்கள் சோனியாகாந்தி, ராகுல்காந்தி, மல்லிகார்ஜுன கார்கே ஆகியோரை முதல்-அமைச்சர் விஜய் சந்தித்து பேச இருக்கிறார்.

ஏற்கனவே, பிரதமர் மோடியை சந்தித்து பேச பிரதமர் அலுவலகத்தில் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. ஆனால், தொடர்ச்சியாக பிரதமர் மோடி, அரசு நிகழ்ச்சிகளிலும், கட்சிப் பணிகளிலும் பங்கேற்று வருவதால் இன்னும் நேரம் ஒதுக்கப்படவில்லை என்று தெரிகிறது. நேரம் கிடைத்ததும் உடனடியாக முதல்-அமைச்சர் விஜய் டெல்லி செல்ல இருக்கிறார்.

அதே நேரத்தில், டெல்லி பயணத்தின்போது, வெறும் அரசியல் ரீதியான சந்திப்புகள் மட்டுமின்றி, தமிழகத்தின் மிக முக்கிய பொருளாதார தேவைகள் தொடர்பாகவும் மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கும் வகையில், மாஸ்டர் பிளானுடன் முதல்-அமைச்சர் விஜய் செல்கிறார்.

கடந்த வாரம் தமிழகத்தின் நிதி நிலைமை தொடர்பாக, நிதித் துறை உயர் அதிகாரிகளுடன் முதல்-அமைச்சர் விஜய் ஆலோசனை நடத்தினார். அப்போது, தி.மு.க. ஆட்சிகாலத்தில் ஏற்பட்ட கடுமையான நிதிநெருக்கடியை சமாளிப்பதுதான் பெரிய சவாலாக இருக்கும் என்பது அவருக்கு தெரியவந்தது.

நிதி நெருக்கடியை சமாளிக்க, மத்திய அரசுடன் இணக்கமான போக்கை கடைப்பிடிப்பதுதான் சரியாக இருக்கும் என்று அதிகாரிகள் முதல்-அமைச்சர் விஜய்யிடம் தெரிவித்துள்ளனர். ஆனால் அவரோ, "மத்திய அரசைச் சார்ந்திருக்காமல், இந்த நிதிச் சிக்கலைத் தீர்க்க மாற்று வழிகள் எதுவும் இல்லையா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார். அதற்குப் பதிலளித்தநிதித்துறைஅதிகாரிகள், தற்போது 2026-2027-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை தயார் செய்யவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். எனவே, குறுகிய காலத்திற்குள் மாற்று வழிகளைக் கண்டறிந்து நிதி திரட்டுவது என்பது உடனடியாகச் சாத்தியமில்லை. மத்திய அரசிடம் இருந்து நிதிகளை பெறுவதே சரியானதாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளனர்.

அதனை முதல்-அமைச்சர் விஜய்யும் ஏற்றுக்கொண்டதாக தெரிகிறது. அதன் அடிப்படையில், பிரதமர் நரேந்திரமோடியுடனான சந்திப்பின் போது, தமிழகத்திற்கு தேவையான கோரிக்கைகளை கேட்டுப்பெறுவது தொடர்பாக பட்டியல் தயாரிப்பது குறித்த ஆரம்பகட்டப் பணிகள் தொடங்கிவிட்டன.

ஒருபுறம் பிரதமர் மோடி, மத்திய மந்திரி அமித்ஷாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினாலும், மற்றொரு புறம் காங்கிரஸ் தலைவர்கள் சோனியாகாந்தி, ராகுல்காந்தி மற்றும் மல்லிகார்ஜுன கார்கே ஆகியோரையும் முதல்-அமைச்சர் விஜய் சந்தித்து பேச இருக்கிறார். டெல்லி வருகை குறித்து ராகுல்காந்தியிடம் தொலைபேசி மூலம் விஜய் தகவல் தெரிவித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

# "தேர்தல் முடிவுகளுக்குப் பின் திமுக கூட்டணியை காப்பாற்றும் வலிமை எனக்கு இல்லை" விசிக தலைவர் திருமாவளவன் பேச்சு



சென்னை: "தேர்தல் முடிவுகளுக்குப் பின் திமுக தலைமையிலான கூட்டணியை காப்பாற்றும் வலிமை எனக்கு இல்லை. தமிழ்நாட்டின் அரசியல்நெருக்கடியால் இந்த முடிவை எடுத்தோம் என்பதை மு.க.ஸ்டாலின் அறிவார்" என விசிகதலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மற்றும் விசிக ஆகிய கட்சிகள் அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என தவெக சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. அதன் பின்னர் தொண்டர்கள் மற்றும் முன்னணி பொறுப்பாளர்களுடன் மீண்டும் இது குறித்து கலந்து பேசினோம். எட்டாம் தேதி நடந்த உயர்நிலை குழு கூட்டத்தில் பெரும்பான்மையான தோழர்கள் ஆதரவு நல்குவது என முடிவெடுத்து விட்ட பிறகு அமைச்சரவையில் இடம்பெறுவது தான் சரியாக இருக்கும் என்ற கருத்தை முன் வைத்தார்கள்.

ஆனாலும் நான் கட்சியின் தலைவர் என்கிற முறையில் பொதுச்செயலாளர்களோடு மீண்டும் பேசிவிட்டுதான் முடிவை எடுப்பேன்; அந்த முடிவு என்னவாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என கூறிவிட்டேன்.

விசிகஎடுத்தமுடிவுக்கு பதவி ஆசை காரணம் இல்லை. தமிழ்நாட்டின் அரசியல்நெருக்கடியால் இந்த முடிவை எடுத்தோம் என்பதை மு.க.ஸ்டாலின் அறிவார். நானே அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்ற கருத்து வந்தபோது நான் அதற்கு இணங்கவில்லை. அமைச்சரவையில் இடம்பெறுவது உறுதிபடுத்தப்பட்டபோதுவன்னி அரசை பரிந்துரைப்பதே சரி என முடிவு செய்தேன்.

தவெக அமைச்சரவையில் இடம்பெற்றது குறித்து மேற்கொண்டு கருத்து சொல்வதற்கு எதுவுமில்லை. தேர்தல் நேரத்தில்தான் யாருடன் பயணிப்பது, கூட்டணி என்பது குறித்த முடிவுகளை எடுப்பது வழக்கம். தேர்தலுக்கு முந்தைய காலத்தில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி நீடிக்க வேண்டும், அக்கூட்டணி வலுப்பெற வேண்டும் என்பதற்காக என்னாலான முயற்சிகளை செய்தேன்.

என்னை ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்தி திமுக கூட்டணியை சிதறடிக்க பல முனைகளில் இருந்தும், பல தரப்பினர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர். அதற்கு சற்றும் இடம் கொடுக்காமல் நான் உறுதியாக நின்றேன். திமுக கூட்டணியை பலவீனப்படுத்தஒருபோதும் இடம்தரமாட்டேன் என்பதை நடைமுறைப்படுத்தி காட்டுகிறேன். இதில் யாரும் மாற்றுக் கருத்தை சொல்ல முடியாது. என்னை குறிவைத்து சாதிய, மதவாத கட்சிகள் காய்களை நகர்த்தினார்கள். கோபமூட்டினார்கள்; ஆத்திரமூட்டினார்கள். என்னால் எந்த அளவுக்கு உறுதிணையாக இருக்க முடியுமோ, அந்தளவுக்கு துணையாக இருந்தேன்.

ஆனால் தேர்தலுக்கு பின் கூட்டணியை காக்கும் வலிமை எனக்கு இல்லை. காங்கிரஸ் எடுத்த முடிவை தடுக்கும் வலிமை எனக்கில்லை; கம்யூனிஸ்டுகள் எடுத்த முடிவை நிறுத்த எனக்கு வலிமை இல்லை. தமிழக மக்கள் கூட்டணி ஆட்சியை விரும்புகின்றனர்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் நிலைபாட்டில் என்னால் தலையீடு செய்ய முடியாது. சமூக ஊடகங்களில் என் மீது மட்டும் அவதூறு கணைகளை வீசிவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. காலத்தின் கட்டாயத்தால் கூட்டணி ஆட்சி ஏற்பட்டுள்ளது. இடதுசாரிகளின் முடிவை முன்வைத்து எங்கள் கட்சியில் ஆலோசித்து பின்னர் முடிவெடுத்தோம். நாங்கள் திமுக கூட்டணியில் இருந்தோம். ஆதரவு நல்குவதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அது எங்களில் உரிமை, சுதந்திரம். அதில் யாரும் தலையிட முடியாது.

திருமாவளவன் ஏன் தாமதப்படுத்துகிறார். தாமதத்துக்கு இது தான் காரணமா என வாய்க்கு வந்தபடி பேசினார்கள். அவதூறுகளை அள்ளி வீசினார்கள். எங்களின் அரசியல் உரிமையையோ, நேர்மையையோ கலங்கப்படுத்த யாருக்கும் உரிமை இல்லை. எங்கள் கட்சிக்கு ஒரு விதிமுறை, வரையறை இருக்கிறது. ஒரு கட்சியை உருவாக்கி அந்த கட்சியை 10 ஆண்டுகள் கட்டுக்கோப்பாக வழி நடத்துவது அவ்வளவு இலகுவான காரியம் கிடையாது. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தலைவர் மு.க.ஸ்டாலினின் கவனத்துக்கு கொண்டு சென்று அவருடைய வாழ்த்துக்களுடன்தான் அல்லது ஆதரவோடுதான் அல்லது இசைவோடு தான் இந்த ஆதரவை ஆட்சி அமைப்பதற்காக வழங்குகிறோம் என்று அறிவித்து விட்டுதான் வழங்கி இருக்கிறோம். குடியரசுத் தலைவர் ஆட்சியை தடுக்க ஆதரவை வழங்கினோம்.

நீங்கள் இவ்வாறு செய்யக்கூடாது என எந்த இடத்திலும் அண்ணன் மு.க.ஸ்டாலின் சொல்லவில்லை. தற்போதைய அரசியல் சூழலை தெரிந்துகொண்டு, அவருடைய பக்குவத்தின் அடிப்படையில் அவர் இந்த விஷயத்தை அணுகினார். நாம் ஒற்றுமையோடு செயல்படுவோம்; தவெக ஆட்சி அமைக்க நாம் இடையூறாக இருக்க வேண்டியதில்லை என தெரிவித்துட்டார். இது அவரின் அரசியல் பக்குவத்தையும், முதிர்ச்சியையும் காட்டுகிறது.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வளர்ச்சியை பிடிக்காதவர்கள் தொடர்ந்து காலம் காலமாக எங்களுக்கு எதிராக காழ்ப்புணர்வை கக்கி வருகின்றனர். அவர்கள் திரும்பத் திரும்ப இதை செய்து கொண்டிருக்கிறார்கள்" என்று தெரிவித்தார்.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# விவசாயி மீது துப்பாக்கிச்சூடு 10 இடங்களில் குண்டு பாய்ந்து காயம்



கரூர் மாவட்டம் கடவூர் அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற விவசாயி கருணாகிரியை மர்ம நபர்கள் நாட்டுத்துப்பாக்கியால் சுட்டதில், 10 குண்டுகள் முதுகில் பாய்ந்து படுகாயமடைந்த அவரை மீட்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

கரூர் மாவட்டம் கடவூர் பகுதியில் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த விவசாயி ஒருவரை, மர்ம நபர்கள் நாட்டுத்துப்பாக்கியால் சுட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

வளையப்பட்டியைச் சேர்ந்த கருணாகிரி என்ற விவசாயி, தனது இருசக்கர வாகனத்தில் வழக்கம்போல சென்றுகொண்டிருந்தார். அப்போது எதிர்பாராத விதமாக, அங்கு மறைந்திருந்த மர்ம நபர்கள் அவரை நோக்கி நாட்டுத்துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இந்த கொடூரத் தாக்குதலில் அவரது முதுகில் சுமார் 10 குண்டுகள் பாய்ந்தன.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரத்த வெள்ளத்தில் சரிந்த கருணாகிரியை, அங்கிருந்தவர்கள் மீட்டு உடனடியாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து தகவல் அறிந்த கரூர் மாவட்ட போலீசார் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று முதற்கட்ட விசாரணையைத் தொடங்கினர். விவசாயி கருணாகிரியை நாட்டுத்துப்பாக்கியால் சுட்ட மர்ம நபர்கள் யார், எந்த காரணத்திற்காக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது, முன்விரோதம் ஏதேனும் காரணமா என்ற பல்வேறு கோணங்களில் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பட்டப்பகலில் விவசாயி ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட இச்சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## மத்தூர் அருகே பரபரப்பு:

# எம்சேண்ட் கடத்த முயன்ற டிப்பர் லாரி பறிமுதல் – தப்பியோடிய டிரைவருக்கு வலைவீச்சு



கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் அருகே எம்சேண்ட்(M-Sand) ஏற்றிச் செல்வது போல நாடகமாடி, ஆற்று மணல் கடத்த முயன்ற டிப்பர் லாரியைக் காவல்துறையினர் அதிரடியாகப் பறிமுதல் செய்துள்ளனர்
. இச்சம்பவம் தொடர்பாகப் பிரபல மணல் மா:ஃபியா மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மத்தூர் காவல் ஆய்வாளர் வெங்கடேஷ்பிரபு மற்றும் போலீசார் நேற்று இரவு பெனுகொண்டாபுரம் கிராமப் பகுதியில் தீவிர இரவு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த டிப்பர் லாரி ஒன்றை நிறுத்திச் சோதனையிட்டனர். லாரியை ஓட்டி வந்த ஓட்டுநரிடம் எம்-சேண்ட் கொண்டு செல்வதற்கான அனுமதி கடிதத்தைக் கேட்டுள்ளனர். அதற்கு அவர் முன்னுக்குப் பின் முரணாகப் பதிலளித்ததால் போலீசாருக்கு சந்தேகம் வலுத்தது.

சந்தேகமடைந்த காவல்ஆய்வாளர்வெங்கடேஷ்பிரபு,உடனடியாக டிப்பர் லாரியின் மீது ஏறிப் பார்வையிட்டார். அப்போது லாரியின் மேற்புறத்தில் மட்டும் எம்-சேண்ட் தூவிவிட்டு, அதற்கு அடியில் ஆற்று மணலைக்கடத்தி வந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

காவல் ஆய்வாளர் லாரியின் மீது ஏறுவதைக் கண்ட ஓட்டுநர், வாகனத்தை அங்கேயே நிறுத்திவிட்டு இருட்டில் ஓடித் தலைமறைவானார். இதையடுத்து, மணல் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட டிப்பர் லாரியைப் பறிமுதல் செய்த போலீசார், அதனை மத்தூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்தனர்.

போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், பறிமுதல் செய்யப்பட்ட லாரி மத்தூர் பகுதியைச் சேர்ந்த பிரபல மணல் மா:ஃபியா திருப்பதி என்பவருக்குச் சொந்தமானது என்பது தெரியவந்துள்ளது. கடந்த 3 நாட்களுக்கு முன்புதான் இதே திருப்பதிக்குச் சொந்தமான மற்றொரு டிப்பர்லாரி,மணல் கடத்தலின் போது பிடிபட்டு மத்தூர் காவல் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. இந்தச் சூழலில், தற்போது மீண்டும் அவரது மற்றொரு லாரி பிடிபட்டிருப்பது மத்தூர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மத்தூரை அடுத்த ராமகிருஷ்ணம்பதி கிராமத்தில் உள்ள நடுப்பட்டு ஆற்றிலிருந்து தொடர்ந்து இரவு நேரங்களில் சட்டவிரோதமாக மணல்திருடப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். மணல் மா:ஃபியா திருப்பதி கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பகுதியில் தொடர்ந்து ஆற்று மணல் திருட்டில் ஈடுபட்டு வருகிறார் என்றும், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் இவரது மணல் திருட்டைத் காவல்துறையினரால் முற்றிலும் தடுக்க முடியவில்லை என்றும் சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர். தப்பியோடிய லாரி ஓட்டுநரையும், தலைமறைவாக உள்ள மணல் மா:ஃபியா திருப்பதியையும் போலீசார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.



# சேப்பாக்கத்தில் இலவச கண் சிகிச்சை முகாம்; ஏராளமான பொதுமக்கள் பயன்பெற்றனர்

கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள சேப்பாக்கம் கிராமத்தில் அரசு (ஆதிந ) துவக்க பள்ளியில் இலவச கண் சிகிச்சை முகாம் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. நல்லூர் ஸ்ரீ பாலாஜி மேல்நிலைப்பள்ளியின் தாளாளரும், விருத்தாச்சலம் ரோட்டரி சங்கத் தலைவருமான அன்புகுமரன் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில் பொதுமக்களுக்குகண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, கண் தொடர்பான குறைபாடுகள் கண்டறியப்பட்டவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மேலும் அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் மேல்சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர்.

கண்புரை உள்ளிட்ட கண் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

இந்த முகாமில், சேப்பாக்கம் டாக்டர் அம்பேத்கர் இளைஞர் நற்பணி மன்றத்தின் தலைவர் பிரசாந்த், துணைத்தலைவர் அஜித், நிர்வாகி நவீன், தி.மு.க. நல்லூர் வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் கனல் குணசேகரன், விசிக வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்கருப்பன், திமுக ஒன்றிய அயலக அணி அமைப்பாளர் ஞானசேகர், ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் மணிகண்டன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும் சேப்பாக்கம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு கண் பரிசோதனை செய்து பயனடைந்தனர்.

## கோவையில் சிறந்த மேக்கப் கலைஞர்களுக்கான

# தென்னிந்திய அளவிலான மேக் 2026 எனும் போட்டியில் கலந்து கொண்ட மேக்கப் கலைஞர்கள்

கோவையில் சிறந்த மேக்கப் கலைஞர்களுக்கான தென்னிந்திய அளவிலான மேக் 2026 எனும் போட்டியில் கலந்து கொண்ட மேக்கப் கலைஞர்கள், முதல்பரிசாக ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள நகையை தட்டி சென்றனர். தமிழகம் உட்பட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மேக்கப் கலைஞர்கள் தங்கள் மாடல்களுடன் மேடையில் அணிவகுப்பு நடத்தி அசத்தினர்.

மேக்கப் மற்றும் :ஃபேஷன் துறையில் புதிய திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் கோவையில் மேக் 2026 எனும் மேக்கப் ஆர்டிஸ்ட் போட்டி, ஆடை அலங்கார அணி வகுப்பு மற்றும் :ஃபேஷன் நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது...

கம்:ஃபோர்ட் ஷூட்ஸ் சார்பாக அதன் நிறுவனர் அக்ஷயா தலைமையில் நடைபெற்ற இதில்,தமிழகம் மட்டுமின்றி கேரளா,கர்நாடகா,ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து மேக்கப் துறை சார்ந்த கலைஞர்கள் பலர் இதில் கலந்து கொண்டனர்..




இந்திய திருமணங்களின் பாரம்பரிய உடைகள் எனும் தலைப்பில் நடைபெற்ற இதில், புடவை,லகங்கா,சோளி போன்ற உடைகளை அணிந்த மாடல் பெண்கள் மணக்கோலத்தில் மேடையில் ராம்ப் வாக் நடந்து அசத்தினர்..

நிகழ்ச்சியில் மாடல்கள், மேக்கப் ஆர்டிஸ்ட்கள், டிசைனர்கள் மற்றும் :ஃபேஷன் பிராண்டுகள் கலந்து கொண்டு நவீன மற்றும் பாரம்பரிய ஆடைகளை அறிமுகப்படுத்தினர்இதில் சிறந்த சிகை அலங்காரம்,புதுமை,இயற்கை அலங்காரம் என பல்வேறுபிரிவுகளில்போட்டியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகற் வழங்கப்பட்டன..

இதில் நடுவர்களாக பிரபல அழகியல் நிபுணர்கள் சத்யா,ஷைனி பார்பரா,அகிலாஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறந்த மேக்கப் கலைஞர்களை தேர்வு செய்தனர்.. போட்டியில் வெற்றி பெறுவோருக்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்பிலான வைரம் மற்றும் தங்க முலாம் பூசப்பட்ட ஆபரணங்கள் பரிசாக வழங்கப்படுவதாக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அக்ஷயா தெரிவித்தார்..மேக்கப் மற்றும் :ஃபேஷன் துறையில் புதிய திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் நடத்தப்பட்ட இந்த நிகழ்ச்சி, இளைஞர்கள் மற்றும் :ஃபேஷன் துறையினரின் கவனத்தை ஈர்த்துள்ளது குறிப்பிடதக்கது.



கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ஸ்டாலின் தலைமையில், குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களைத் தடுக்கும் நோக்கில் வெளியிடப்பட்ட போக்சோ விழிப்புணர்வு போஸ்டர்கள் தற்போது மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் பொதுமக்கள் கூடும் இடங்களில் நிமிர் குழுவினரால் ஒட்டப்பட்டு வரப்படுகிறது பள்ளி கல்லூரிகள் விரைவில் திறக்கப்பட உள்ள நிலையில் இளம் தலைமுறையினர் பாதுகாப்பாகவும் விழிப்புணர்வுடன் இருந்து பாலியல் குற்றங்களில் இருந்து தங்களை முன்கூட்டியே தற்காத்துக்கொள்ள இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


## குற்றச்சம்பவங்களை தடுக்கவும் மற்றும் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பை காக்கும் பொருட்டும் வரலாற்றுத்தாள் ரவுடிகள் மற்றும் பிரச்சனைக்குரிய நபர்களை சோதனை செய்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டது

ஈரோடு மாவட்டத்தில் குற்ற சம்பவங்களை தடுக்கவும், தொடர்ந்து குற்றங்களில் ஈடுபடும் நபர்களை கண்காணிக்கவும், மேற்குமண்டல காவல் துறை தலைவர் மற்றும் கோவை சரக காவல் துணை தலைவர் அவர்கள் உத்தரவின் பேரில், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில் காவல் நிலையங்களில் உள்ள வரலாற்றுத்தாளில் பதிவாகியுள்ள ரவுடிகள் மற்றும் வரலாற்றுத்தாளில் பதிவாகாத ரவுடித்தனம் செய்யும் நபர்கள் மீது தீவிர கண்காணிப்பு மற்றும் தேடுதல் வேட்டை கடந்த 20.05.2026 ம் தேதி முதல், ஈரோடு மாவட்ட அனைத்து காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை கொண்டு மாவட்டம் முழுவதும் நடத்தப்பட்டது. இச்சோதனையின் விளைவாக மாவட்டத்தில் உள்ள 612 ரவுடிகளில் 115 ரவுடிகளின் வசிப்பிடங்கள் சோதனை செய்தும், அதில் 34 ரவுடிகளை பிடித்து விசாரணை செய்யப்பட்டது. அதேபோல் வரலாற்றுத்தாளில் பதிவாகாத ரவுடித்தனத்தில் ஈடுபடும் 29 நபர்களை கண்டறிந்து அவர்களது வசிப்பிடங்கள் சோதனை செய்தும், அதில் 5 நபர்களை பிடித்து விசாரணை செய்யப்பட்டது. மேலும் 23 வரலாற்றுத்தாளில் பதிவாகாத குற்றவாளிகளை கைது செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## சென்னை விமான நிலையம் அருகே திடீரென வீசிய சூறைக்காற்று தரையிறங்க முடியாமல் திணறிய விமானம்




சென்னை: சென்னை விமான நிலைய பகுதியில் திடீரென பலத்த சூறைக்காற்று வீசியதன் காரணமாக, ஹைதராபாத்தில் இருந்து சென்னை வந்த விமானம் தரையிறங்க முடியாமல் திருப்பதி விமான நிலையத்திற்கு அனுப்பப்பட்டது. சென்னை புறநகர் மீனம்பாக்கம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் திடீரென பலத்த சூறைக்காற்றுடன் மோசமான வானிலை நிலவியது. இதன் காரணமாக அந்த நேரத்தில் சென்னை விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. ஹைதராபாத்தில் இருந்து 82 பயணிகளுடன் சென்னைக்கு தரையிறங்க வந்த ஏடிஆர் என்ற சிறிய ரக விமானம் தரையிறங்க முடியாமல் சூறைக்காற்றில் சிக்கி தவித்தது. இதனையடுத்து பயணிகளின் பாதுகாப்பு கருதி அந்த விமானமானது அருகிலிருக்கும் திருப்பதி விமான நிலையத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டது. அதே போல் துபாய், அபுதாபி ஆகிய இடங்களில் இருந்து சென்னையில் தரையிறங்க வந்த விமானங்களும், தரையிறங்க முடியாத நிலை ஏற்பட்டதால், அவை நீண்ட நேரம் வானில் வட்டமடித்து பறந்தன. சூறைக்காற்று ஓய்ந்த பின்பு சென்னையில் தரையிறங்கின. சென்னைக்கு வந்திறங்கிய விமானங்கள் மட்டுமல்லாமல், சென்னையில் இருந்து டெல்லி, வாரணாசி,கொல்கத்தா,பெங்களூரு,கோவை,மதுரை மற்றும் கோலாலம்பூர் ஆகிய பகுதிகளுக்கு புறப்பட வேண்டிய விமானங்களும் சுமார் அரை மணி நேரம் தாமதமாக புறப்பட்டு சென்றன. திடீரென வீசிய சூறைக்காற்றால்,சென்னைக்கு வருகைபுரிந்தவர்கள் மட்டுமல்லாமல், சென்னையிலிருந்து வெளியூர்களுக்கு புறப்பட்ட பயணிகளும் அவதிக்குள்ளாகினர்.



தமிழ்நாடு அரசின் தமிழக கைத்தறி துணி நூல் மற்றும் கதர் கிராமத் தொழிலாளர் வாரியம் ஆகிய முக்கிய பொறுப்புகளை கவனிக்கிறார் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ம.விஜய் பாலாஜி ஜவுளி நகரமான ஈரோட்டை சேர்ந்தவருக்கு இத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.கட்சி நிர்வாகிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையே பெரும் மகிழ்ச்சி ஏற்படுத்தி உள்ளது. தவெக பாசூர் பேரூராட்சி செயலாளர் மு.ஞானசேகரன் தனது சார்பாக அமைச்சர் ம.விஜய் பாலாஜி அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள் என தெரிவித்துள்ளார்.

# ஈரோடு கணபதிபாளையம் அரசு பள்ளி மாணவி எஸ்.கனிஷ்கா ஜப்பான் சென்றுள்ளார்



ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஒன்றியம் கணபதிபாளையம் அரசுமேல்நிலைப்பள்ளி மாணவி எஸ்.கனிஷ்கா தென்னிந்திய அறிவியல் கண்காட்சி மற்றும் தேசிய அளவிலான அறிவியல் போட்டிகளில் தொடர்ந்து சாதனை படைத்துள்ளார் அதன் மூலம் சகுரா சாயின்ஸ் உயர்நிலைப்பள்ளி திட்டம்–2026 மூலம் ஜப்பான் செல்ல தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஜப்பான் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் நிறுவனம் சார்பில் நடைபெறும் திட்டத்தில் தமிழ்நாட்டில் இருந்து 4 அரசு பள்ளி மாணவர்கள் மற்றும் 1 ஆசிரியர் மட்டுமே தேர்வு செய்யப்பட்டுள்ளார்

அதில் ஈரோடு மாவட்டம் கணபதிபாளையம் அரசுமேல்நிலைப்பள்ளி மாணவி எஸ்.கனிஷ்காவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவி எஸ்.கனிஷ்காவின் இந்த சாதனைக்கு தலைமை ஆசிரியர் இருபால் ஆசிரியர் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டனர்.

மே 24 முதல் 30 வரை ஜப்பானில் நடைபெறும் திட்டத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிகழ்ச்சியில் மாணவி எஸ்.கனிஷ்கா பங்கேற்க உள்ளார்.

# நீர் நிலைகளில் கழிவு நீர் கலக்கப்பட்டால் உடனே நடவடிக்கை எடுக்கப்படும்; அதுல எந்த விதமான பாரபட்சமும் கிடையாது

## சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ராஜீவ் எச்சரிக்கை




மக்களுக்கு தீங்கு விளைவிக்கிற எதுனாலும் நீங்கள் ஸ்ட்ரிக்டான ஆக்ஷன் எடுக்கலாம் அப்படின்றத சிஎம் சார் எனக்கு உத்தரவிட்டு இருக்கார்-மக்களுக்கு தீங்கு எதுனாலும் கண்டிப்பாக அது நிறுத்தப்படும்.

அமைச்சராக பொறுப்பேற்ற பின் முதல் முதலாக தொகுதிக்கு செல்வதற்காக சென்னையிலிருந்து விமானம் மூலம் மதுரை வந்து அடைந்தார் சுற்றுச்சூழல்துறைஅமைச்சர் வி கே ராஜீவ், அவருக்கு மதுரை விமான நிலையத்தில் தவெக தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து அமைச்சர் பேசும் போது:

தமிழ்நாட்டு முதல்வர், எங்களின் அன்பான தலைவர்,ஜோசப் விஜய் அவர்களின் அமைச்சரவையில் எனக்கு வாய்ப்பளித்தமைக்கு ரொம்ப நன்றி. சுற்றுச்சூழல் அமைச்சராக பதவியேற்று,நான் பிறந்த மண் மதுரை, இங்க இருந்து நான் என்னோட சொந்த மண்ணான ராமநாதபுரத்திற்கு பயணிக்க இருக்கின்றேன். கண்டிப்பா ஒரு முதல்வர் வந்து என் நம்பிக்கை வைத்து இந்த துறையை கொடுத்திருக்கிறார். கண்டிப்பாக ஒரு மாற்றம் கண்டிப்பாக தமிழகத்தில் என் துறை சார்பாக நிறைய மாற்றங்கள் வரவிருக்கிறது. கூடிய விரைவில் தமிழக மக்கள் அதை பார்க்கப் போகிறார்கள்.

வாகனபுகைசோதனை மையங்கள் முறையாக செயல்படவில்லை குறித்த கேள்விக்கு:

இனிமேல் எல்லாமே பண்ணுவோம். கண்டிப்பா மீட்டிங் போட்டு, இனிமே எல்லாமே முடக்கி விட்டுட்டு இருப்போம். கூடிய விரைவில் நிறைய மாற்றங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்.எங்கதுறை சார்பாக நிறைய முன்னெடுப்புகளை நாங்க மேற்கொண்டு இருக்கோம்.கண்டிப்பாஅடுத்த வாரத்துல இருந்து நிறைய மாற்றங்கள் இருக்கும்.

மரம் நடுவது பெயரளவில் உள்ளது நீங்க சுற்றுச்சூழல் அமைச்சராக பொறுப்பேற்றிருக்கிறீர்கள். ராமநாதபுரம் மாவட்டம் அதிக வெயில் உள்ளமாவட்டம்.அங்கே எந்த மாதிரியான மாற்றங்கள் வரும் என்ற கேள்விக்கு:

ராமநாதபுரம் மாவட்டத்தை பொறுத்தவரை தண்ணீர் பிரச்சனை தான் முதல் பிரச்சனை. நான் மந்திரியாக இப்ப பதவியேற்ற உடனே மெயினா வந்து எங்களுக்கு குடிநீர் தான்.பின்தங்கிய மாவட்டங்கள் என்ற பெயரை மாற்ற வேண்டும்.நான் என் கல்லூரி காலத்தில் படிக்கும் போது, எந்த ஊர் என்பார்கள் ராமநாதபுரம்னாலே அவங்க பின்தங்கிய மாவட்டம் என்ற மாதிரி பார்ப்பார்கள். அப்படிப்பட்ட மாவட்டம் எங்களோட மாவட்டம் கிடையாது. அந்த மாவட்டத்தை இன்னும் எவ்வளவு தூரம் எங்களால், நம்ம முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,பல திட்டங்களை கொண்டு வர வேண்டும். உங்களுக்கு தெரியும் ராமநாதபுரம் மாவட்டத்தை பொறுத்தவரை சுற்றுலா தளங்கள் நிறைய மேம்படுத்திக் கொண்டு வர வேண்டும். முக்கியமாக எல்லா மதங்களின் தளங்கள் இருக்கு,ஓரியூர் சர்ச், ஏர்வாடி தர்கா இந்த மாதிரி, ராமேஸ்வரம் கோவில், உத்திரகோசமங்கை கோவில்,ரொம்ப பிரசித்திபெற்றகோவில்கள் எல்லாம் அங்கு இருக்கு, நிறைய சுற்றுலா பயணிகள் வராங்க உங்களுக்கு தெரியும். அதனால் இப்போ வந்து பரமக்குடியில் இருந்து ராமநாதபுரம் நான்கு வழி சாலை போடுகிறார்கள் ஏன்னா அவ்வளவு வண்டிகள் புழக்கம் உள்ளதாகஇருக்கு.அதனால இன்னும் வந்து ராமநாதபுரம் மாவட்டத்தை மேம்படுத்தி, ரொம்ப இண்டஸ்ட்ரிஸ் இல்லாமல் இருக்கு,முக்கியமா தண்ணீர் பிரச்சனையை எல்லா இடத்திலும் போக்கி, முடிப்பது என்பது ஒரு அடிப்படை தேவை. முதல்ல அதை தான் எங்களுக்கு பிரதானமாக எடுத்து இருக்கிறோம். சுற்றுச்சூழல் எடுத்துக்கொண்டால், இப்போ தேவிபட்டினம் கடற்கரையில் நிறைய வந்து, கழிவுகள் தேங்கி இருந்தது, அதை உடனடியாக நாங்கள் ஆய்வு மேற்கொண்டு உடனே, சுத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதே மாதிரி தொண்டி பகுதியில், அதே மாதிரி சேதுக்கரை, ராமேஸ்வரத்தில்நிறைய துணிகளை கழட்டி போடுகிறார்கள் உங்களுக்கு தெரியும். அதனால நிறைய என் துறை சார்ந்த நிறைய இருக்கு. அதெல்லாம் கண்டிப்பா கூடிய விரைவிலேயே ஆய்வு செய்து, அதுக்கு என்ன மாற்று பார்த்து, எல்லாமே சரி செய்து, எல்லாமே சுத்தமான ஒரு தமிழ்நாடா கண்டிப்பா எடுத்துக்காட்டா உங்களுக்கு மக்களுக்கு நாங்கள், எங்க துறை சார்பாக நாங்க நல்ல செயல்படுவோம் என்ற பெயரை உங்களிடம் வாங்கதான்போகிறோம்.

பிளாஸ்டிக் வந்து 20% மைக்ரான் வந்து, அது அவேர்னஸ் இல்லாமல் அதைவிட கம்மியானது தான் அதிகமாயூஸ்பண்றாங்க பற்றிய கேள்விக்கு:

நான் எதையுமே வந்து வாய்மொழியா சொல்லாமல், செயல் மூலமாக நிரூபிக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அதை கூடிய விரைவில் நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். மக்களுக்கு தீங்கு விளைவிக்கிற எதாக இருந்தாலும் தளபதி நமது தமிழக முதலமைச்சர்வந்துஸ்ட்ரிக்டா சொல்லி இருக்காங்க. அதாவது மக்களுக்கு தீங்கு விளைவிக்கிற எதுனாலும் நீங்கள் ஆக்ஷன் எடுக்கலாம் அப்படின்றத, சிஎம் சார் வந்து எனக்கு உத்தரவிட்டு இருக்கார். அதனால வந்து எதுனாலும் மக்களுக்கு தீங்கு எதுனாலும் கண்டிப்பாக அது நிறுத்தப்படும்.

மக்களுக்கு அந்த அவேர்னஸையும் கொண்டு போவோம். அது எப்படி வேஸ்ட் டிஸ்போசல் எப்படி எப்படி பண்றது? மக்கும் குப்பை மக்காத குப்பை. ஏன்னா மீண்டும் மஞ்சப்பை நிறைய காலங்களாக கொண்டு வந்து இருக்கிறார்கள், அது திடீர்னு திரும்பவும் ஒளிந்து போகிறது. இந்த வாட்டி அது நடக்காது. இனிமே மக்களிடம் ஒரு மாற்றத்தை நாங்கள் கொண்டு வருவோம். அது எந்த வாயிலாகஎந்த அவேர்னஸா கொண்டு போய் அவங்களுக்கு வந்து இதனால் என்ன விளைவு என்று சொன்னாலே மக்கள் புரிந்து கொள்வார்கள். கண்டிப்பா எங்களோட ஒத்துழைத்து கண்டிப்பா ஒரு மாற்றத்தை கூடிய விரைவில் கொடுக்க தான் போகிறோம்.

சென்னை கூவம் நதியை சுத்தம் பண்ண 4,000 கோடிக்கு மேல ஒதுக்கியும் அதை சரியா பணிகள் செய்யவில்லை என்றகுற்றச்சாட்டு உள்ளது சென்னை கூவம் நதியை சுத்தம் செய்ய உங்கள் நடவடிக்கை கேள்விக்கு:

இல்ல பொதுவாகவே போன ஆட்சி காலத்தில், நதிகள் எதுவும் பெரிதாக சுத்தம் பண்ண, சுத்தம் செய்யப்பட்டது எனக்கு தெரியவில்லை. சோ, அதை நான் ஆராய்ந்து எங்களோட அதிகாரிகள் மூலமாக நான் முழுவதுமாக உங்களுக்கு டேட்டாவா தாரேன்.

புதிய முறையாக தமிழக அமைச்சரவையை படித்த இளைஞர்கள் நிறைய பேர் பொறுப்பு எடுத்திருக்கிறீர்கள். எவ்வளவு சேலஞ்சஸ் பேஸ் பண்ணனும்னு நினைக்கிறீங்க? எந்த அளவுதயாராகி இருக்கிறீங்க என்ற கேள்விக்கு:

உங்களுக்கு தெரியும் தமிழ் வெற்றிக் கழகம், ஆரம்பித்ததிலிருந்தே சேலஞ்சஸ் பேஸ் பண்ணிட்டு தான் இருக்கோம். இன்னைக்கு வந்து எல்லா தடைகளையும் தாண்டி வெற்றிப்படியை நோக்கி நாங்கள் போயிட்டே தான் இருக்கோம். அதனால எங்களுக்கு இதெல்லாம் ஒரு தடை கிடையாது. கண்டிப்பா இந்த ஐந்து ஆண்டு காலத்தை வந்து மக்கள் வாழ்நாட்களிலே மறக்க முடியாத அளவிற்கு ஒரு சிறப்பான ஆட்சியாக இருக்கப்போகிறது அதுல நாங்க ஒரு பங்கா, முக்கியமாக நான் ஒரு பங்கா இந்த அமைச்சரவையில் இருக்கிறேன் என்பது எனக்கு பெரிய பெருமை.

நீர்நிலைகளில் குறிப்பாக வைகை நதி நீர்நிலைகளில் மாசு கழிவுநீர் இன்னும் கலக்கிறாங்க பற்றிய கேள்விக்கு:

கூடிய விரைவில் அதெல்லாமே நாங்க ஃபீல்ட் விசிட் நிறைய பண்ண போறோம். அது யாராவது தப்பு செய்யும் பட்சத்தில் உடனே ஆக்ஷன் எடுக்க போறோம். அதுல எந்த விதமான பாரபட்சமும் கிடையாது. அவங்க இவங்க எல்லாம் கிடையாது, கண்டிப்பாக முறையா நேர்மையா நடந்துக்க போறோம். அதுல ஆக்ஷன் வந்து சிவியராக தான் இருக்கும். அதனால அவங்களுக்கு ஒரு வேண்டுகோள், இதோட நிப்பாட்டிக்கங்க. மக்களுக்கு தீங்கு விளைவிக்கிற எதையுமே நீங்கள் பண்ணாதீங்க. அது உங்க ஏன்னா நீங்களும் இந்த மாநிலத்தில் தான் இருக்கீங்க, உங்களுக்குமே அது தீங்கு விளைவிக்கும். அதனால கண்டிப்பா வந்து அதை அவங்களுக்கு புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.நான்உங்களுக்கு சேஞ்சஸ் நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள். அதான் நான் சொன்ன மாதிரி தான் வாய்மொழியா இல்லாமல் செயல் மொழியாக எங்க அரசு நிரூபிக்க தான் போகுது. அதுல கண்டிப்பா முக்கியமாகஇந்தசுற்றுச்சூழல் துறையிலே நீங்கள் நிறைய சேஞ்சஸ் இந்த வாரத்தில் இருந்து நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள்.

கோவையில் வந்து சிறுமி கொலை, அதை எப்படி பார்க்கிறீங்க? தமிழ்நாட்டையே உலுக்கி இருக்கு பற்றிய கேள்விக்கு:

துறைசார்ந்து ஏதாவது கேள்வி இருந்தால் கேளுங்கள் நான்சொல்கிறேன். என் மாவட்டம் சார்ந்துகேள்விகேளுங்கள் நான் சொல்கிறேன் என்றார்.

## மத்தூர் அருகே சோகம்:

# இருசக்கர வாகனங்கள் நேருக்கு நேர் மோதி தொழிலாளி பெண் பரிதாப பலி



கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் அருகே இருசக்கர வாகனங்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட கோரவிபத்தில், செங்கல் சூளை தொழிலாளி என்ற பெண் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

திருப்பத்தூர் மாவட்டம், கனிகாரன் கொட்டாய் பகுதியைச் சேர்ந்தவர் காமாட்சி (வயது 34). இவர் கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த மத்தூர் பகுதியில் உள்ள ஒரு செங்கல் சூளையில் கூலி வேலை செய்து வந்தார்.

வழக்கம்போல் தனது வேலையை முடித்துவிட்டு, காமாட்சி தனது இருசக்கர வாகனத்தில் வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தார். மத்தூர் அருகே அவர் சென்றுகொண்டிருந்தபோது, எதிரே மத்தூர் ஆல்ட்ரிபட்டி கிராமத்தைச் சேர்ந்த இளம் பெண்கள் இருவர் வந்த இருசக்கர வாகனம், எதிர்பாராதவிதமாக காமாட்சியின் வாகனம் மீது நேருக்கு நேர்பயங்கரமாகமோதியது.

இந்த விபத்தின் தூக்கி வீசப்பட்ட காமாட்சிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதில் ரத்த வெள்ளத்தில் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய மற்றொரு இருசக்கர வாகனத்தில் வந்த இரு இளம் பெண்களும் படுகாயமடைந்தனர். அருகில் இருந்தவர்கள் அவர்களை மீட்டு சிகிச்சைக்காக மத்தூர் அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

உயிரிழந்த காமாட்சி, இளம் வயதிலேயே தனது கணவரை இழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. கணவர் மறைவிற்குப் பிறகும் மனந்தளராமல், கூலி வேலை செய்து தனது மூன்று குழந்தைகளையும் அவரே தனியாளாகக் காப்பாற்றி வளர்த்து வந்தார்.

தற்போது தாயும் விபத்தில் உயிரிழந்ததால், அந்த மூன்று குழந்தைகளும் ஆதரவற்று அநாதையாக நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விபத்து குறித்து மத்தூர் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சூலூர் அருகே சிறுமி உயிரிழந்த விவகாரம்: இருவர் கைது; பிரேத பரிசோதனை முடிந்து உடல் பெற்றோரிடம் ஒப்படைப்பு



கோவை மாவட்டம் சூலூர் அருகே 10 வயது சிறுமி மர்மமான முறையில் உயிரிழந்த விவகாரத்தில், தொடர்புடைய குற்றவாளிகள் இருவரை போலீசார் அதிரடியாக கைது செய்துள்ளனர்.

முன்னதாக, ஜான அச்சிறுமி கண்ணம்பாளையம் குளத்தில் சடலமாக கண்டெடுக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து, சிறுமியின் உடல் பிரேத பரிசோதனைக்காக கோவை இ.எஸ்.ஐ (ESI) மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

மருத்துவமனையில் பிரேத பரிசோதனை நடைமுறைகள்அனைத்தும் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, சிறுமியின் உடல் அவரது பெற்றோரிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது. உடலைத் பெற்றுக்கொண்ட பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள், ஆம்புலன்ஸ் மூலம் தங்களது சொந்த ஊரான சேலம் மாவட்டம் மேட்டூர் பகுதிக்கு உடலை எடுத்துச் சென்றனர். அங்கு சிறுமிக்கு இறுதி தொடங்கியது செய்யப்பட உள்ளது. இச்சம்பவம் குறித்து போலீசார் தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசால் தடை செய்யப்பட்ட 17 கிலோ குட்கா பறிமுதல்; ஒருவர் கைது




கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை உள்ளிட்ட போதைப்பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தலை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ஸ்டாலின் உத்தரவில் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பு மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, களியக்காவிளை பகுதியில் சட்டவிரோதமாக குட்கா விற்பனை நடைபெறுவதாககிடைத்தரகசிய தகவலின் அடிப்படையில், களியக்காவிளை போலீசார் தீவிர சோதனை நடத்தினர்.

மேற்கொண்ட சோதனையில், சேரி விளைவீடு பகுதியை சேர்ந்த குமாரசாமி என்பவரின் மகன் குமார் (50) விற்பனைக்காகபதுக்கிவைக்கப்பட்டிருந்த 17 கிலோ அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு களியக்காவிளை காவல் நிலைய குற்ற எண் 134/2026 U/S 123 BNS, 24(1) Cotpa Act இன் கீழ் வழக்கு பதிந்து கைது செய்யப்பட்டார்.

# ரூ.10 கோடி மதிப்புள்ள அரசு நிலம் அபகரிப்பு வழக்கில் விசாரணை தள்ளிவைப்பு

## ஆக்கிரமிப்பாளருக்கு அபராதம் விதிக்க கோவை மாநகராட்சி கோரிக்கை விடுத்துள்ளது



கோவை சரவணம்பட்டி மீனாட்சி நகர் லே-அவுட்டில் பொது மக்கள் நலனுக்காகவும், சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காகவும் பூங்கா அமைக்க 'ஓ.எஸ். ஆர்' நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. ரூ.10 கோடி மதிப்பிலான இந்த நிலத்தை கடந்த பல ஆண்டுகளுக்கும் மேலாக சிவஞானம் என்பவரின் மகன் எஸ். அரவிந்த் ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்து வந்துள்ளார்.

மேலும், அந்த பூங்கா நிலத்திற்குப் பதிலாக தனக்குச் சொந்தமான மாற்று நிலத்தை மாநகராட்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

சிவஞானத்தின் மகன் அரவிந்தின் இந்தகோரிக்கையை கடந்த 8.12.2020 அன்று கோவை மாநகராட்சி நிராகரித்தது. ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி கடந்த 17.7.2021 அன்று மாநகராட்சி சார்பில் அரவிந்துக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

மாநகராட்சியின் நோட்டீஸை எதிர்த்து அரவிந்த் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். ஆனால், அவரது மனுவை தள்ளுபடிசெய்துகடந்த19.12.2025 அன்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும், ஆக்கிரமிப்பை அகற்றி, அந்தநிலத்தைபொதுமக்கள் பயன்பாட்டிற்காக பூங்காவாக மேம்படுத்த மாநகராட்சிக்கு உத்தரவிட்டது. இதனடிப்படையில்,கடந்தஜனவரி 21 ஆம் தேதி கோவை மாநகராட்சி அதிகாரிகள் பெரும் போராட்டத்திற்கு இடையே அந்த பூங்கா நிலத்தை மீட்டெடுத்து, சுற்றிலும்வேலி அமைத்து தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சென்னை உயர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை எதிர்த்து அரவிந்த் டெல்லியில் உள்ள உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கில் கோவை மாநகராட்சி தரப்பில் வழக்கறிஞர் பூர்ணிமா கிருஷ்ணா மூலம் சுப்ரீம் கோர்ட்டில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில் மாநகராட்சி ஆணையர் கூறியிருப்பதாவது:

"அங்கீகரிக்கப்பட்ட லே-அவுட்டில் பூங்கா க்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களுக்காக ஒதுக்கப்படும் நிலங்கள் பொதுமக்களின் நலனுக்கானவை. அதை வேறு எந்தப் பயன்பாட்டிற்கும் மாற்ற முடியாது என்று உச்ச நீதிமன்றமே பல தீர்ப்புகளில்தெளிவுபடுத்தியுள்ளது. மனுதாரர் தனது நிலத்திற்குச் செல்ல பூங்கா நிலத்தை பாதையாகப் பயன்படுத்த அனுமதி கேட்கிறார். ஆனால், நில வரைபடத்தின்படி அவரது நிலத்திற்குச் செல்ல முறையான தனிப்பாதை மற்றும் வழிகள் உள்ளது. தற்சமயம் அவரது குடும்பத்தாரின் நிலத்தின் வழியாகச் சென்று வருகிறார். எனவே, சுயநலத்திற்காக பொது நிலத்தை ஆக்கிரமித்தவருக்கு எந்த சலுகையும் காட்ட முடியாது. இந்த மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால், செலவுத் தொகையுடன் இந்த மனுவைதள்ளுபடிசெய்ய வேண்டும்." இவ்வாறு அந்த பதில் மனுவில் கூறப்ப ட்டுள்ளது. இந்த வழக்கின் விசாரணை உச்ச நீதிமன்றத்தில் நேற்று வந்தது. வழக்கு விசாரணையை நீதிபதி ஆகஸ்ட் 14 ஆம் தேதிக்கு தள்ளி வைத்து அன்று இறுதி உத்தரவு பிறப்பிக்கபடும் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு ரிசர்வ் சைட் பாதுகாப்பு சங்கத்தின் செயலாளர் எஸ்.பி.தியாகராஜன் கூறும்போது இதுபோல அரசு பொது இடங்களை ஆக்கிரமிப்பு கடுமையாக தண்டிப்பதோடு மட்டுமல்லாமல் அபராதம் விதிக்க வேண்டும் என்றார்.



தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி (23.05.2026) அன்று ஈரோடு காலிங்கராயன் விருந்தினர் மாளிகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மலர்கொத்து வழங்கி வரவேற்ற போது எடுத்த புகைப்படம்.



முல்லை நகர் பகுதியில் 90 வருட பழமையான பூர்வீக ஸ்ரீ சமயபுரம் முத்துமாரியம்மன் கோவில் ஸ்ரீ கருப்பசாமி ஸ்ரீ நாகம்மாள் 70 ஆம் ஆண்டு உற்சவ விழா மற்றும் 21 ஆம் ஆண்டு அன்னதான விழா கடந்த 12ஆம் தேதி கொடி கட்டுதல் மற்றும் காப்பு கட்டுதல் நிகழ்வுடன் துவங்கியது, திருவிழாவில் திருவிளக்கு பூஜை அம்மன் வீதி உலா பால்குடம் எடுத்தல் சக்தி கரகம் அக்னி சட்டி முளைப்பாரி ஊர்வலம் பொங்கல் வைத்தல் மாவிளக்கு வைத்தல் உள்ளிட்ட நேர்த்திக் கடன் நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். தொடர்ந்து விழாவில் நிறைவு நிகழ்வானமாபெரும்அன்னதானம்செய்யப்பட்டதுமேலும்சிறுவர்களுக்கானவிளையாட்டுப்போட்டியும்நடைபெற்றது, நிகழ்ச்சி ஏற்பாடுகளை தலைவர் ராஜேஷ்வரன் செயலாளர் ராஜேஷ் காரியதரிசி சுரேஷ் கோவில் பூசாரி பாலமுருகன் சக்தி கரக பூசாரி மணிகண்டன் கருப்பசாமி பூசாரி செந்தில்குமார் இளைஞர் அணி தலைவர் செந்தில் முருகன் செயலாளர் சுபாஷ் சந்திரபோஸ் உட்பட நிர்வாகிகள் விழா குழுவினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்

# தவறான சிகிச்சையால் திருச்சி நர்சிங் மாணவி உயிரிழப்பு?

## விசாரணை குழு அமைத்து அரசு உத்தரவு



திருச்சி: அரசு மருத்துவக் கல்லூரியில் தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதில் நர்சிங் படிக்கும்மாணவி உயிரிழந்ததாகக் கூறி சக மாணவிகள் போராட்டம் நடத்திய நிலையில், விசாரணை குழு அமைத்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

திருச்சி கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மகாத்மா காந்தி நினைவு அரசு பொது மருத்துவமனையில், தவறான சிகிச்சை காரணமாக நர்சிங் மாணவி ஒருவர் உயிரிழந்ததாக தகவல் வெளியானது. மூக்கடைப்பு மற்றும் மூச்சுத்திணறல் பாதிப்புகாரணமாகஅந்த மாணவி திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மூக்கு அறுவை சிகிச்சையின் போது அதிக அளவிலான மயக்க மருந்து கொடுக்கப்பட்டதே உயிரிழப்புக்குக் காரணம் என சக மாணவிகளும், உறவினர்களும் குற்றம் சாட்டினர். மருத்துவர்களின் அலட்சியம் மற்றும் தவறான சிகிச்சையால் தான் இந்த மரணம் நிகழ்ந்தது என கூறி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மருத்துவமனை நிர்வாகத்தைக் கண்டித்து சக நர்சிங் மாணவிகள், குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் மருத்துவமனை முன்பாகச் சாலை மறியல் மற்றும் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மருத்துவமனை வளாகத்தில் பெரும்பரபரப்பும்பதற்றமும் நிலவியது.

இதனையடுத்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ், துணை சபாநாயகர் ரவிசங்கர்,மாவட்ட ஆட்சியர் சரவணன், மருத்துவமனை முதல்வர் குமரவேல், காவல் துறை மத்திய மண்டல ஐஜி பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் சம்பவ இடத்திற்குவிரைந்துபோராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது தமிழ்நாடு அரசின் சிங்கப்படை எங்கே போச்சு? தூங்க போச்சா?என்றும்,தவெக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு தூங்க போச்சா? என்றும் போராட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ், "மாணவியின் மரணம் குறித்து விசாரிக்க

முதலமைச்சர் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் சிறப்பு விசாரணை குழு அமைக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழு இறப்பு குறித்து விசாரணை மேற்கொண்டு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும்.

எங்களது உறுதிமொழியை ஏற்று போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டுள்ளனர். மருத்துவர்கள் கூறும் காரணங்களை மாணவிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. தரமான மருத்துவ சேவை என்பதே எங்களது இலக்கு. போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாது" என்றார்.

விசாரணைக் குழு அமைப்பு

இதனிடையே, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் பணியாற்றி வரும் உறைவிட மருத்துவர் என். பாஸ்கர் தலைமையில் 4 பேர் கொண்ட விசாரணை குழுவை அமைத்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.இந்த குழுவில் காது, மூக்கு,தொண்டை பேராசிரியர் பாரதி மோகன், மயக்கவியல் பேராசிரியர் சண்முகசுந்தரம், மருத்துவப் பேராசிரியர் ஜெயபிரகாஷ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்த குழுவினர் உடனடியாக திருச்சிக்கு விரைந்து, மாணவியின் மரணம் குறித்து முழுமையான வெளிப்படையான விசாரணை நடத்தி அறிக்கைதாக்கல் செய்ய உள்ளது.

இதனிடையே, மாணவியின் உயிரிழப்புக்கு முதலமைச்சர் விஜய் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில், "மாணவியை இழந்து தவித்து வாடும் பெற்றோர்,உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக விசாரணைக்காக சென்னை ராஜீவ் காந்திஅரசுபொதுமருத்துவமனையில் இருந்து நான்கு மூத்த மருத்துவர்கள் குழு திருச்சிக்கு விரைந்துள்ளது. அவர்கள் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

# "கோயில்கள் இனி எனது நேரடி கண்காணிப்பில் இருக்கும்" அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் பேட்டி



திருச்சி: 'மைக்ரோ மேனேஜ்மென்ட்' முறை மூலம் தமிழகத்தின் அனைத்து கோயில்களும் தனது நேரடி கண்காணிப்பில் இருக்கும்படி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் எஸ். ரமேஷ் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று பெரும்பிடுகு முத்தரையர் சதயவிழாவில் பங்கேற்று, அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் எஸ்.ரமேஷ், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், "எங்களது கொள்கை மதச்சார்பற்ற சமூகநீதி. அதுதான் எங்கள் கொள்கையாக எங்களது தலைவர் முன்னிறுத்தினார். அந்த கொள்கையை ஏற்றுக்கொண்டு சாதிய வேற்றுமை தவிர்த்து தந்தை பெரியார், சட்டமேதை அம்பேத்கரை கொள்கை தலைவராக ஏற்றுக்கொண்டு கட்சியில் இணைந்து பணியாற்றி வருகிறோம்.

சாதியோ, பணமோ, இனமோ, மொழியோ, பாலினமோ எந்தவித பாகுபாடும் கிடையாது என்பதை உறுதிமொழியாக ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு நாளும் அந்த உறுதியை நெஞ்சில் தாங்கிக் கொண்டு இருக்கிறோம்.

அதேபோன்று கோயில் சார்ந்து இருக்கக்கூடிய சொத்துக்கள், நிலங்கள் மீதான ஆக்கிரமிப்புகள் அனைத்தும் ஒவ்வொன்றாக ஆய்வு செய்து மக்களுக்குப் பயனளிக்கக் கூடியவகையில்அனைத்தும் மீட்டு கொண்டு வரப்படும். இந்து சமய அறநிலைத்துறையில் பணியாற்றும் உயர்மட்ட அதிகாரிகள் மட்டும் அல்ல, கீழ்மட்ட ஊழியர்கள் வரை எந்தவித ஊழலிலும் ஈடுபடவோ, அதிகாரத்தைப் பயன்படுத்தவோ இடம் கிடையாது. 'மைக்ரோ மேனேஜ்மென்ட்' முறை மூலம் அனைத்து கோயில்களும் எனது நேரடி கண்காணிப்பில் இருக்கும். ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் திட்டங்கள் அனைத்தும் திறம்பட செயல்படுத்தப்படும். புதிய திட்டங்களும் கொண்டு வரப்படும். மக்களுக்கு பயனளிக்கக் கூடிய வகையில் நிர்வாகம் மேம்படுத்தப்படும். சாதி, பணம், இனம் எனஎதைப்பார்த்தும்எங்கள் தலைவர் எங்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை.சேவைசெய்யக்கூடிய மனநிலை இருக்கிறதாஎன்பதைபார்த்துதான் வாய்ப்பு வழங்கியிருக்கிறார். சாதியை வைத்து இங்கு பேச வேண்டிய அவசியம் கிடையாது. மக்களுக்காக இந்த சேவை செய்ய வந்திருக்கக்கூடிய எண்ணத்தை தான் நாம் பார்க்க வேண்டும். எங்கள் தலைவருக்காக மட்டுமே அனைவரும் வாக்களித்து உள்ளார்கள். எங்களுக்காக வாக்களிக்கவில்லை. தலைவர் விஜயை திரையில் பார்க்கும்போது யாரும் ஜாதி, மதம், இனம் அடிப்படையில் அவரை பார்க்கவில்லை. அதேபோன்றுதான் எங்களையும் மக்கள் பார்க்கிறார்கள்.எங்கள் தலைவருக்கு இதுபோன்ற பிரிவினை பார்க்கக்கூடிய எண்ணமும் கிடையாது.

கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்கள் ஒரு நல்ல மனநிலையில் சுவாமி கும்பிட்டுவிட்டு அதே மனநிலையோடு செல்ல வேண்டும்.

அவர்களுக்கு எவ்வித சிரமமும் ஏற்படக்கூடாது. கோயில்களில் இருக்கக்கூடிய கூட்ட நெரிசல் மற்றும் நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்படாத வண்ணம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தி உள்ளோம். திருக்கோயில்களில் இதுவரைஏதேனும்முறைகேடுகள் நடைபெற்றிருந்தால் அவை அனைத்தும் சரி செய்யப்பட்டு, இந்து சமய அறநிலைத்துறை ஒரு சிறந்த துறை என்று அனைவரும் பாராட்டக்கூடிய துறையாக செயல்படுத்துவேன்.


ஸ்ரீரங்கம் மற்றும் திருவானைக்கோவில் பகுதிகளில் அடிமனை பிரச்சினைஅதிகமாகஉள்ளது. அதுதொடர்பாக இன்று மாலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடக்கிறது. அதன் பின்னர் முழுமையான விவரங்களை தெரிவிக்கிறேன்.மக்களுக்கு நியாயமான முறையில் என்ன கிடைக்க வேண்டுமோ அதை சரியான முறையில் பெற்று தருவேன். கோயில்களில் அனைத்து அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தி இருக்கிறேன். கொஞ்சம் கால அவகாசம் மட்டும் கொடுங்கள். அனைத்தையும் நிச்சயம் செய்வேன்" என தெரிவித்தார்.



தமிழ்நாடு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி (23.05.2026) அன்று ஈரோடு காலிங்கராயன் விருந்தினர் மாளிகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மலர்கொத்து வழங்கி வரவேற்ற போது எடுத்த புகைப்படம். உடன் ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன் உள்ளார்.



சென்னைதலைமைசெயலகத்தில்ஜப்பான்அறிவியல்மற்றும்தொழில்நுட்பநிறுவனம்சார்பில்செயல்படுத்தப்படும் சகுரா சயின்ஸ் உயர்நிலைப்பள்ளி பரிமாற்ற திட்டம் என்ற சர்வதேச கல்வி மற்றும் அறிவியல் பரிமாற்ற திட்டத்தில் பங்கேற்க செல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 4 அரசு பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் 1 ஆசிரியர் ஆகியோர் பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் பள்ளி கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.சந்திரமோகன் , பள்ளிக் கல்வித்துறை இயக்குனர் முனைவர் ச. கண்ணப்பன், தொடக்கக்கல்வி இயக்குனர் முனைவர் பூ.ஆ.நரேஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.



திராவிட முன்னேற்றக் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கு இணங்க ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி அன்பகம் உதயம் இளைஞர் அணி அலுவலகத்தில் நடந்து முடிந்த 2026 சட்டமன்ற தேர்தலின் வெற்றி வாய்ப்பை தவற விட்டதை ஆலோசனை செய்ய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட சி. பி.எம்.எழிலரசன் ( EXMLA கழக கொள்கை பரப்பு செயலாளர்) மற்றும் மாநில மாணவர் அணி துணை செயலாளர் மன்னை சோழராஜன் ஆகியோர் ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொடக்குறிச்சி தொகுதியில் ஆய்வு கூட்டத்தினை நடத்தி மனுக்களை பெற்று கொண்டு தனித்தனியாக கருத்துக்களை கேட்டறிந்தனர் . இக்கூட்டத்தில் ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் சு.முத்துசாமி தொகுதி பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், மாநில நெசவாளர் அணி செயலாளர் SLT. சச்சிதானந்தம் , வேட்பாளர் செந்தில்நாதன் மற்றும் கழக மாநில, மாவட்ட, ஒன்றிய கழக செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# Trump considers bombing Iran again as frustration grows over peace talks deadlock:



*Trump held a high-level national security meeting at the White House on Friday to assess the status of talks and review military options, should diplomacy fail.*

*US President Donald Trump is increasingly leaning towards bombing Iran again, Axios reported, quoting senior US officials. This comes as fragile negotiations between Washington and Tehran show little signs of a breakthrough.*

*Trump held a high-level national security meeting at the White House on Friday to assess the status of talks and review military options, should diplomacy fail. Officials said the president has grown frustrated with the slow pace of negotiations and is weighing fresh strikes unless Iran makes major concessions soon.*

*The meeting was attended by vice president JD Vance, defence secretary Pete Hegseth, CIA director John Ratcliffe and White House chief of staff Susie Wiles, among other senior officials.*

*The report added that a final decision on new strikes is yet to be made.*

*US officials involved in the talks described the negotiations as difficult and slow-moving. A peace agreement has not been reached so far. A senior Iranian official told Reuters that negotiations were continuing. The Trump administration's primary objective is to sharply curb Iran's nuclear capabilities and prevent Tehran from becoming a near-atomic power. Washington has pushed for a long-term halt to uranium enrichment, stricter inspections and limits on Iran's military reach in the region.*

*Among the key US demands reportedly under discussion are:*

*A freeze on Iran's uranium enrichment programme for up to 20 years.*

*Transfer or surrender of Iran's highly enriched uranium stockpile.*

*Closure or dismantling of key nuclear facilities, including Fordow, Natanz and Isfahan.*

*Strict international monitoring of centrifuges and nuclear sites.*

*Limits on Iran's ballistic missile programme.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.